**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No.41/2022**

**நாள்.23.06.2026**

**வா.சா. 1- அய்யனார்**

**1வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கில் உள்ள 3 முதல் 9 பிரதிவாதிகளுக்கு 2011ம் ஆண்டே 1வது பிரதிவாதி வழக்கு 2வது தபசில் சொத்துக்களை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் தெரியாது. வழக்கு 2வது தபசில் சொத்தில் கோட்டூர்சாமி மற்றும் சுந்தரத்தாய் ஆகியோருக்கு வீடுகள் உள்ளன என்றால் சரியல்ல. வழக்கு 2வது தபசில் சொத்தில் தற்போது எத்தனை வீடுகள் உள்ளது என்றால் வழக்குப் போட்டதற்கு பிறகு ஒரு வீடு 3வது பிரதிவாதி கருத்தப்பாண்டி என்பவரால் கட்டப்பட்டது. வழக்கு 1வது தபசில் சொத்தில் புல எண்.312/1B ல் எனது சகோதரர் சீனிவாசன் என்பவர் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல என் அப்பா தான் வீடு கட்டினார். வழக்கு 1வது தபசில் சொத்தில் என் அப்பா வீடு கட்டியுள்ள விபரத்தை வழக்கு சொத்து விபரத்தில் சொல்லவில்லை காலியிடமாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு 2வது தபசில் சொத்தில் பொன்னுச்சாமி மகன் முனியசாமி கிரையம் பெற்று வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. பொன்னுச்சாமி மகன் முனியசாமி யார் என எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. என் தகப்பனார் இறந்தபிறகு, தபசில் சொத்துக்கள் அனைத்தையும் பொன்னுச்சாமி மகன் முனியசாமி நீங்கலாக எனது உடன்பிறந்த சகோதரர்கள் அனைவரும் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. வழக்கு 1வது தபசில் சொத்து எனக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டது என்பதற்கு எந்த வருவாய்த்துறை ஆவணமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு எண்.133/2022 என்ன ஆனது என எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் தெரியாது.

நான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு எண்.133/2022 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் தபசில் புல எண்களில் எனக்கு ஏதேனும் உரிமை இருந்தால் கீழமை நீதிமன்றங்களில் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்குப் போடுமாறு அறிவுறுத்தி 06.01.2022 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தெரியாது. என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.6 ன் படி மனைப்பிரிவுகளாக மாற்ற அனுமதி கொடுத்ததற்கு எதிராக ஊராட்சி மன்றத்தில் நடவடிக்கை எடுத்தேனா என்றால் மனைப்பிரிவுகளாக மாற்ற அனுமதி வாங்கியது எனக்கு தெரியாது. எனது வீட்டுக்கும், 1, 2 தபசில் சொத்துக்கும் இடையே எவ்வளவு இடைவெளி என்றால் 100 மீட்டர் இருக்கும். இந்த வழக்கிற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே 2017 ம் ஆண்டில் 1, 2 தபசில் சொத்துக்கள் குடியிருப்பு பகுதி மனைப்பிரிவுகளாக மாற்ற அனுமதி வாங்கப்பட்டுவிட்டது என்றால் தெரியாது. 2017 ம் ஆண்டில் 1, 2 தபசில் சொத்துக்கள் குடியிருப்பு பகுதி மனைப்பிரிவுகளாக மாற்ற அனுமதி வாங்கப்பட்டுவிட்ட விபரம் எனக்கு தெரியும், வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.8 வாரிசு சான்றிதழ் 09.02.2022 ல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 09.02.2022 ல் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் முதல் மனைவி மகன் முத்துச்சாமி என்பவரை மறைத்து பெறப்பட்டுள்ளதால், மேற்படி வாரிசு சான்றிதழை ரத்து செய்து, முதல் மனைவி மகன் முத்துச்சாமி என்பவரை சேர்க்க வேண்டும் என பரிகாரம் கேட்டு முதல் மனைவி மகன் முத்துச்சாமி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி நீதிப்பேராணை மனுவில் அரசு அலுவலர்கள் தவிர எனது தாயாரும், நானும், எனது உடன்பிறந்த சகோதர சகோதரரிகளும் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் தெரியாது. மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நீதிப்பேராணை மனு உத்தரவின்படி சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியருக்கு எனது தந்தையின் வாரிசு குறித்து மீண்டும் விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

இந்த வழக்கிற்கு முன்பே 2011ம் ஆண்டிலேயே 1வது பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட வழக்கு 2 வது தபசில் சொத்துக்கள் மனைப்பிரிவுகளாக பிரிவினை செய்யப்பட்டு, 3 முதல் 9 பிரதிவாதிகள் மற்றும் பல நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும், அதனால் தான் நான் நீதிமன்ற ஆணையரை இவ்வழக்கில் நியமித்து தபசில் சொத்தை பார்வையிட முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு காலாவதி தோஷத்தால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு பிராதில் கோரியபடி எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதி ஆவினில் மண்டல் மேலாளராக பணிபுரிந்து வருகிறார் என்றால் பால் பண்ணையில் பணியாற்றுகிறார். இந்த வழக்கிற்கு முன்பாக நானும், எனது சகோதரர் மற்றும் என்னை சார்ந்தவர்கள் 1வது பிரதிவாதி மற்றும் அவரது மனைவியை தாக்கியதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் அந்த வழக்கு பொய்யானது. ஆரம்ப காலம் முதலே 2 வது தபசில் சொத்து மனைப்பிரிவுகளாக மாற்றப்பட்டு, விற்பனை செய்த முன்விரோதத்தால் நான் செயல்பட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>1வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**<u>2வது பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.23 18:31:37 +0530